

## நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்த நடவடிக்கை

# முல்லை பெரியாறு அணை: படகில் சென்று துரைமுருகன் ஆய்வு

## 3 அமைச்சர்களும் உடன் சென்றனர்

தேனி, நவ.6–

தேனி மாவட்டம் முல்லை பெரியாறு அணை பகுதியில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் படகில் சென்று பார்வையிட்டு, கூட்டுறவுத்துறை அமைச்சர் இ.பெரியசாமி, உணவு துறை அமைச்சர் அர.சக்கரபாணி, வணிகவரித்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோருடன் ஆய்வு மேற்கொண்டார்.

அமைச்சர் துரைமுருகன் நேற்று (5–ந் தேதி) முல்லை பெரியாறு அணையின் நீர்மட்டம், நீர்வரத்து, நீர் வெளியேற்றம், மதகு பகுதி, பேபிஅணை பகுதி ஆகியவற்றை படகில் சென்று பார்வையிட்டார். அமைச்சர்கள் இ.பெரியசாமி, அர.சக்கரபாணி, பி.மூர்த்தி, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்சேனா,

காவிரி தொழில் நுட்ப குழுமத்தலைவர் சுப்பிரமணியன், கலெக்டர் முரளீதரன், சட்டமன்ற உறுப்பினர்கள் என்.ராமகிருஷ்ணன் (கம்பம்), ஆ.மகாராஜன் (ஆண்டிபட்டி), கே.எஸ். சரவணக்குமார் (பெரியகுளம்), கோ.தளபதி (மதுரை வடக்கு), ஆ.வெங்கடேசன் (சோழவந்தான்), காவல் கண்காணிப்பாளர் பிரவிண் உமேஷ் டோங்கரே, முல்லை பெரியாறு அணை தலைமை பொறியாளர் கிருஷ்ணன் ஆகியோருடன் ஆய்வு மேற்கொணடார்.

இந்த ஆய்வின் போது, அமைச்சர் துரைமுருகன், முல்லை பெரியாறு பிரதான அணையின் நீர்மட்டம், நீர்வரத்து, நீர் வெளியேற்றம், அணையின் பலப்படுத்தப்பட்ட விபரங்கள், கசிவு நீர் போக்கு கட்டுக்குள் உள்ளது குறித்து, நீர்மட்ட அளவு கருவி ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பேபிஅணையில் வெட்டப்பட வேண்டிய மரங்கள் குறித்த விபரங்களை துறை அலுவலர்களிடம் கேட்டறிந்தார். பணிகளை விரைந்து மேற்கொள்ள துறை அலுவலர்களுக்கு ஆலோசனை அமைச்சர் வழங்கினார். உபரி நீர் வழிந்தோடும் மதகுகளை ஆய்வு செய்து, நீர்வரத்து மற்றும் வெளியேற்றம் ஆகியன குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் அமைச்சர் துரைமுருகன் கூறியதாவது:–

நான் நீர்வளத்துறை அமைச்சர் என்பதால் முல்லை பெரியாறு அணையினை ஆய்வு மேற்கொள்ள வருகை தந்துள்ளேன். நான் பதவியேற்றவுடன் வந்திருக்க வேண்டும். கொரோனா காலகட்டம் என்பதால் வரமுடியாத சூழ்நிலை ஏற்பட்டது. முதற்கட்டமாக இந்த அணையில் ஆய்வு மேற்கொண்டுள்ளேன். இதற்கு அடுத்த கட்டமாக ஆலியார் அணையினை ஆய்வு மேற்கொள்ள உள்ளேன். மேலும், உச்ச நீதிமன்ற உத்தரவின்படி, முல்லைப் பெரியாறு அணையிலிருந்து காலமுறை அணையின் நீர் மட்ட அட்டவணை முறையை பின்பற்றி நீரின் அளவை பொறுத்தே தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

### அணை பலமாக உள்ளது

பல்வேறு தொழில்நுட்ப குழுக்கள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அணை பலமாக உள்ளது எனக் கூறியுள்ளனர். தமிழக அரசின் சார்பில் இயங்கி வரும் பழமை வாய்ந்த படகுகளை மாற்றி புதிய விரைவு படகுகளை உரிய அனுமதி பெற்று இயக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும், பேபி அணையில் வெட்டப்பட வேண்டிய 3 மரங்களை வனத்துறையினரிடம் உரிய அனுமதி பெற்று மரங்களை அகற்றுவதற்கும், பேபி அணையை பலப்படுத்திய பின்பு முல்லை பெரியாறு அணையில் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

கடந்த 10 ஆண்டு கால ஆட்சிகாலத்தில் எந்த அமைச்சர்களும் முல்லை பெரியாறு அணையினை நேரில் சென்று ஆய்வு மேற்கொள்ளவில்லை. முதலமைச்சரின் அறிவுறுத்தலின்படி, முல்லைப்பெரியாறு அணையில் இன்றைய தினம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், கேரள அரசும் தமிழ்நாடு அரசும் சுமூக பேச்சுவார்த்தை நடத்தி, உரிய தீர்வு காண்பதற்கு நடவடிக்கைள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

ஆய்வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் க.ரமேஷ், உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் கௌசல்யா, கூடுதல் தலைமை பொறியாளர் ஞானசேகரன், கண்காணிப்பு பொறியாளர் சுகுமாரன், செயற்பொறியாளர் சியாம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்க தமிழ்ச்செல்வன், எல்.மூக்கையா உட்பட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

# 30ந்தேதியோடு இலவச உணவு தானியம் வழங்கும் திட்டம் நிறைவு

## மத்திய அரசு அறிவிப்பு

புதுடெல்லி, நவ.6

ரேஷன் கடைகள் மூலம் இலவச உணவு தானியங்கள் வழங்கும் திட்டம் வருகிற 30ந்தேதிக்கு பிறகு நீட்டிக்கப்படாது என்று மத்திய அரசு கூறியுள்ளது.

கொரோனா பரவலைத் தொடர்ந்து, ஏழைகளின் உணவு தேவையை பூர்த்தி செய்ய கடந்த ஆண்டு மார்ச் மாதம், பிரதம மந்திரி கரிப் கல்யாண் யோஜனா என்ற திட்டத்தை மத்திய அரசு தொடங்கியது.

இதன்கீழ், நாடு முழுவதும் 80 கோடி பேருக்கு ரேஷன் கடைகள் மூலம் இலவச உணவு தானியங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மானிய விலை உணவு தானியத்துக்கு மேல், ஒவ்வொருவருக்கும் கூடுதலாக 5 கிலோ உணவு தானியம் இலவசமாக வழங்கப்படுகிறது.

முதலில், கடந்த ஆண்டு ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரை மட்டும் இலவச உணவு தானியம் வழங்குவதாக அறிவிக்கப்பட்டது. பிறகு அடுத்தடுத்து நீட்டிக்கப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ், இலவச உணவு தானியங்கள் வழங்கும் பணி, வருகிற 30ந் தேதியுடன் முடிவடைகிறது. அதன்பிறகு, இப்பணி நீட்டிக்கப்படாது என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

இதுகுறித்து நேற்று மத்திய உணவுத்துறை செயலாளர் சுதன்சு பாண்டே கூறியதாவது: தற்போது பொருளாதாரம் மீண்டு வருகிறது. வெளிச்சந்தையில் தாராளமாக கிடைக்கும் அளவுக்கு உணவு தானியங்கள் புழக்கம் நன்றாக உள்ளது. அந்த அளவுக்கு அரிசி, கோதுமையை வினியோகித்துள்ளோம்.

எனவே, வருகிற 30ந் தேதிக்கு பிறகு இலவச உணவு தானியம் வழங்கும் பணி நீட்டிக்கப்படாது.

இவ்வாறு அவர் கூறினார்.

## சென்னை கோயம்பேடு பஸ் நிலையத்தில்

# ‘விடுதலைப்போரில் தமிழகம்’ புகைப்பட கண்காட்சி 14–ந் தேதி வரை நீட்டிப்பு

சென்னை, நவ.6–

சென்னை கோயம்பேடு பேருந்து நிலையத்தில் ‘விடுதலைப்போரில் தமிழகம்’ என்ற புகைப்பட கண்காட்சி நவம்பர் 1 முதல் 8–ம் தேதி வரை ஒருவார காலத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று மேலும் ஒரு வார காலத்திற்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

வரும் நவம்பர் 14–ம் தேதி வரை பொதுமக்கள் பார்வையிட ஏதுவாக காலை 8 மணி முதல் இரவு 9 மணி வரை திறந்திருக்கும். பொதுமக்கள், பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்கள் போட்டித் தேர்வுக்குத் தயாராகும் இளைஞர்கள் என அனைவரும் இலவசமாக கண்டுகளிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு, நாட்டின் விடுதலைக்கு அரும்பாடுபட்ட தலைவர்களைப் போற்றும் வகையிலும், குறிப்பாக, தமிழ்நாட்டைச் சார்ந்த தலைவர்களின் தியாகங்களை வருங்காலச் சந்ததியினரும் அறிந்துணர்ந்து பயன்பெறும் வகையிலும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில், சென்னை கோயம்பேடு புறநகர பேருந்து நிலைய வளாகத்தில் 75–வது சுதந்திரத் திருநாள் கொண்டாட்டத்தின் தொடர்ச்சியாக இந்திய விடுதலைப் போராட்ட தியாகிகளின் வீரப் பெருமிதங்களை நினைவுகூர்ந்து போற்றும் வகையில் “விடுதலைப் போரில் தமிழகம்” என்ற மாபெரும் புகைப்படக் கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது. இதனை முதலமைச்சர் திறந்து வைத்தார்.

அண்ணல் காந்தியடிகள், பண்டித ஜவகர்லால் நேரு, மகாகவி பாரதியார், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார், வீரமங்கை வேலுநாச்சியார் ஆகியோரின் சிலைகள் இடம் பெற்று இக்கண்காட்சியைச் சிறப்பிக்கின்றன. ஏறத்தாழ 20 முறை தமிழகத்திற்கு வருகைதந்து தமிழர்களை, தமிழகத்தை, தமிழ்மொழியை நேசித்த அண்ணல் காந்தியடிகளுக்கு விடுதலைப் போராட்ட வியூகங்களை வகுப்பதில் தமிழ்நாடு ஒரு முக்கிய களமாக விளங்கியதை வரலாறு போற்றிக் கொண்டுள்ளது.

சீரிய அவ்வரலாற்று நிகழ்வுகள் பலவற்றை எடுத்துக் கூறும் அரிய புகைப்படங்கள், இந்திய விடுதலைப் போராட்டங்களின் பல்வேறு வரலாற்றுத்தொகுப்புகள், குறிப்பாக, உப்பு சத்தியாகிரகப் போராட்டம், சுதந்திரப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பு போன்றவைகள் குறித்த புகைப்படங்கள், சுதந்திரப் போராட்டத்தில் பங்குபெற்றும் மக்களால் இதுவரை அறியப்படாத தியாகிகளின் புகைப்படங்கள் எனப் பலவும் இதில் இடம்பெற்றுள்ளன.

### அனைவரது கவனத்தை ஈர்த்தது

மேலும், பத்திரிகைத் தகவல் அலுவலகம் (பி.ஐ.பி) புத்தக நிலையம், ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம், பரிசல் புத்தக நிலையம் ஆகிய நிறுவனங்களின் பங்களிப்புகளும், தட்சிண சித்ரா குழுவினரால் அமைக்கப்பட்டுள்ள விடுதலைப் போராட்டம் பற்றிய அருமையான பழைய மண் பொம்மைகள், ஒலியோகிராப் படங்கள், மரத்திலான இராட்டை போன்றவைகள்,

தமிழ்நாடு அரசு ஆவண காப்பகத்தின் மூலம் கட்டபொம்மன் தூக்கிலிட்டது குறித்து கிழக்கிந்திய கம்பெனிக்கு பானர்மேன் கொடுத்த அறிக்கை, மருது பாண்டியர்கள் தூக்கிலிடப்பட்ட விசாரணை ஆவணங்கள், ஆஷ்துரை கொலை வழக்கு பற்றிய ஆவணம், நீல் சிலை உடைப்பு குறித்த ஆவணம், வ.உ.சி. வழக்கு (திருநெல்வேலி சதி வழக்கு) ஆவணங்கள், செஞ்சிக்கோட்டை மற்றும் இதர கோட்டையின் நிலவரைகள், வேலூர் சிப்பாய் கலகம் பற்றிய வரலாற்று ஆவணங்கள் குறித்த புகைப்படங்களும் பார்வை யாளர்களின் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

# நாடு முழுவதும் சமையல் எண்ணெய் விலை சரிவு

புதுடெல்லி, நவ.6

நாடு முழுவதும் சமையல் எண்ணெய் விலை சரிவடைந்துள்ளது.

பண்டிகை காலத்தில் சமையல் எண்ணெயின் விலையை குறைப்பதற்கு மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இறக்குமதி வரி குறைப்பு, இருப்பு வைக்க கட்டுப்பாடுகள், விலையை குறைக்க எண்ணெய் நிறுவனங்களுக்கு உத்தரவு போன்ற நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டது. இந்த நடவடிக்கை களின் பலனாக நாடு முழுவதும் சமையல் எண்ணெய் விலை கடந்த சில நாட்களில் ரூ.5 முதல் ரூ.20 வரை குறைந்திருப்பதாக மத்திய அரசின் தரவுகள் தெரிவிக்கின்றன. டெல்லியில் கடந்த 31ந் தேதி முதல் நேற்று முன்தினம் வரை பாமாயில் கிலோ ஒன்றுக்கு ரூ.6 குறைந்திருக்கிறது. சூரியகாந்தி எண்ணெய் ரூ.10ம், கடுகு எண்ணெய் ரூ.6ம் குறைந்திருப்பதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய மத்திய உணவுத்துறை செயலாளர் சுதான்சு பாண்டே, ‘நாடு முழுவதும் கடந்த சில நாட்களாக சமையல் எண்ணெய் விலை குறைந்து வருகிறது. சர்வதேச அளவில் இவற்றின் விலை அதிகமாக உள்ளபோதும், அரசின் முயற்சியால் உள்நாட்டில் குறைந்து வருகிறது’ என்று கூறினார்.


**IN THE COURT OF XVI SMALL CAUSES AT CHENNAI**
**E.P No. 806 OF 2021**
**IN**
**RLTOP No. 249 OF 2021**

Mrs. Heather D'Couto
W/o late Johnny D'Couto
... Decree Holder/ Landlady
-VERSUS-
Mrs.Sangeetha
Wife of Mr.Muthu,
... Judgement Debtor/ Tenant
Mrs.Sangeetha Wife of Mr.Muthu, No.6A, Anderson Road, (Shop facing Bangaru Reddy Street), Ayanavaram, Chennai — 600023

The above Execution Petition filed by the Decree Holder/ Landlady against you seeking to execute the Decree dated 16.08.2021 passed in RLTOP No.249 of 2021, stands posted to 06.12.2021, for your appearance. Take notice to appear before the Hon'ble XVI Small Causes Court, Chennai on 06.12.2021 at 10:30 A.M or so soon thereafter, and say objection if any, failing which the above Original Petition will be heard and decided exparte.

(N.PREMKUMAR)
Counsel for Decree Holder/ Landlady

**பொது அறிவிப்பு**

இதன் மூலம் தெரிவித்துக் கொள்வது யாதெனில் எனது கட்சிக்காரர் திரு. இராமலிங்கம் அவர்களின் மனைவி திருமதி. R. ஜெயமங்கலம், செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் தாலுக்கா, அச்சரப்பாக்கம் பஞ்சாயத்து எல்லைக்குட்பட்டதுமான எண். 54, வைப்பண்ணை கிராமத்தில் 11 ஏக்கர் 33 சென்ட் உள்ள சொத்துவிவரத்தில் கண்டுள்ள புஞ்சை விவசாய நிலத்தை அந்நிலத்தின் உரிமையாளர் திரு. K. ஏழுமலை, திரு. R. குலசேகரன், திரு. V. நாகராஜ், திரு. C. தயாளன், திருமதி. D. லதா மற்றும், P. வரதன் அவர்களிடமிருந்து வாங்க உத்தேசித்துள்ளார்.

யாதேனும் நபருக்கு ஏதாவது விதத்தில் இச்சொத்திலோ அல்லது எந்தவொரு பகுதியிலோ, ஆட்சேபனை அல்லது ஏதேனும் உரிமையோ, அதாவது விற்பனை, செட்டில்மெண்ட், குத்தகை, மரபுரிமை, பரிமாற்றம், அடமானம், அல்லது வேறு ஏதாவது தொடர்பு இருக்குமாயின் இந்த அறிவிப்பு வெளியிட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்குள் கீழே குறிப்பிட்டுள்ள நபரது முகவரியில் ஆட்சேபனைகளை தெரிவிக்கவும். அப்படி நடைபெறாத பட்சத்தில் எந்த விதமான குறிப்பு, அல்லது முன் அறிவிப்பு இல்லாமல் சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ள விவசாய நிலத்தை எனது கட்சிக்காரர் கிரையம் பெற யாதொரு ஆட்சேபனையில்லை என்று கருதப்படும். குறிப்பிட்ட நாட்களுக்கு பிறகு வரும் ஆட்சேபனைகள் ஏதாவது இருந்தால் அது செல்லத்தக்கதல்ல என்று கருதப்படும்.

**சொத்துவிவரம்**

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் தாலுக்கா, அச்சரப்பாக்கம் பஞ்சாயத்து எல்லைக்குட்பட்டதுமான எண். 54, வைப்பண்ணை கிராமத்தில் 11 ஏக்கர் 33 செண்ட் உள்ள புஞ்சை விவசாய நிலத்தின் சர்வே எண்கள் பின்வருமாறு

| வ. எண். | சர்வே எண். | பரப்பளவு ஏக்கர் மற்றும் செண்ட் |
|---|---|---|
| 1. | 134/2 | 2 ஏக்கர் 21 செண்ட் |
| 2. | 140/1A | 0 ஏக்கர் 35 செண்ட் |
| 3 | 141/1B | 0 ஏக்கர் 57 செண்ட் |
| 4 | 141/2 | 0 ஏக்கர் 31 செண்ட் |
| 5 | 141/3 | 0 ஏக்கர் 53 செண்ட் |
| 6 | 141/4A | 1 ஏக்கர் 25 செண்ட் |
| 7 | 141/4B | 1 ஏக்கர் 22 செண்ட் |
| 8 | 143 | 0 ஏக்கர் 60 செண்ட் |
| 9 | 144/1B | 0 ஏக்கர் 22 செண்ட் |
| 10 | 146/2 | 2 ஏக்கர் 19 செண்ட் |
| 11 | 134/1B | 0 ஏக்கர் 05 செண்ட் |
| 12 | 135 | 0 ஏக்கர் 48 செண்ட் |
| 13 | 136/2 | 1 ஏக்கர் 20 செண்ட் |
| 14 | 142 | 0 ஏக்கர் 17 செண்ட் |
| | **மொத்தம்** | **11 ஏக்கர் 33 செண்ட்** |

இச்சொத்தானது செங்கல்பட்டு பதிவு மாவட்டம், உத்திரமேரூர் சார் பதிவகத்திற்கு உட்பட்டது.

M.L. **ஸ்ரீபதி, வழக்கறிஞர்**
எண். 40/8, தெற்கு காசர் கார்டன் தெரு, அமைந்தகரை,
சென்னை 600 029
கைபேசி எண்.9381947310

**தமிழ்நாடு பஸ் உரிமையாளர்கள் நிதிநிறுவனம் லிமிடெட்**
CIN: U65191TN1994PLC28196
பு.எண்.6,ப.எண்.19, பிஷப் வாலர்ஸ் அவின்யூ(கிழக்கு), மயிலாப்பூர், சென்னை 600 004.
தொ.எண். 044-24992789/24992519

**27வது ஆண்டு பொதுக்குழு கூட்டம் பற்றி பங்குதாரர்களுக்கு அறிவிப்பு**

கம்பெனி உறுப்பினர்களின் 27வது வருடாந்திர பொதுக்குழு கூட்டம் செவ்வாய்க்கிழமை, நவம்பர் 30, 2021 அன்று மாலை 3 மணியளவில் பு.எண்.6, பழைய எண்.19, பிஷப் வாலர்ஸ் அவின்யூ (கிழக்கு), மைலாப்பூர், சென்னை 600 004 ல் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. 2021ம் ஆண்டிற்கான வருடாந்திர பொதுக்குழு கூட்ட அறிவுப்பு, 2020-21ம் ஆண்டிற்கான அறிக்கை, தொலைதூர மின்னனு வாக்குப்படிவம் ஆகியன மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல் மூலமும் பிறர்க்கு அவர்களின் பதிவு பெற்ற முகவரிக்கு பரிந்துரைக்கப்பட்ட கீழ்கண்ட முறையில் நவம்பர் 05, 2021 அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மேலும் இப்பொதுக்குழு கூட்டத்திற்கான அறிவிப்பை வெப்சைட்டிலிருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 108ன் விதி 20ன் படி இருபத்தி ஏழாவது வருடாந்திர பொதுக்குழு கூட்டத்தில் உறுப்பினர்கள் மின்னனு முறையில் செயல்படுத்தப்பட உள்ள அலுவல்கள் மீது வாக்களிக்க சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் இந்தியா லிமிடெட்டின் (CDSL) மூலமாக வாக்களிக்கும் வசதியை உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

கட்ஆப் தேதியான 23.11.2021 அன்று கம்பெனியில் பங்குகள் வைத்திருப்பவர் மட்டுமே தொலைதூர மின்னனு வாக்குப்பதிவு அல்லது வாக்குச்சீட்டு மூலம் வருடாந்திர பொதுக்குழு கூட்டத்தில் வாக்களிக்கலாம்.

தொலைதூர வாக்குப்பதிவு நவம்பர் 27, 2021 அன்று காலை 9.00 மணிக்கு தொடங்கி நவம்பர் 29, 2021 அன்று மாலை 5.00 மணியுடன் முடிவடையும். இத்தொலைதூர வாக்குப்பதிவு மேற் குறிப்பிட்ட கால நேரத்திற்கு மேல் வாக்களிக்க அனுமதி அளிக்காது.

பங்குதாரர்கள் மற்றும் நன்மையடைந்த உரிமையாளர்கள் மேலும் யாரேனும் ஒருவர் வருடாந்திர அறிக்கை அனுப்பிய பின் ஆனால் கட் ஆப் தேதிக்கு முன் பங்குதாரர்களாயிருந்தால் மின்னனு தொடர்பாக ஏதேனும் சந்தேகம் குறைகள் இருந்தால் அது குறித்து திரு. ஏ. செந்தில் ஆறுமுகம், பைனானஸ் டிபார்ட்மென்ட் தொ.பெ.எண் 044-24992789 அல்லது மின்னஞ்சல் tanbof@gmail.com தொலைதூர வாக்கு சான்றிதழ்களை பெறுவதற்கு தொடர்பு கொள்ளலாம்.

தொலைதூர மின்னனு வாக்கு முறையில் வாக்களிக்காமல் கூட்டத்தில் ஆஜராகும் உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக்குழு கூட்டத்தில் வாக்களிக்கவும் நிதிநிறுவனத்தால் வசதி செய்து தரப்பட்டுள்ளது. தொலைதூர மின்னனு வாக்குப்பதிவின் மூலம் வாக்குகளை பதிவு செய்த உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக்குழு கூட்டத்தில் கலந்து கொள்ளலாம், ஆனால் மீண்டும் வாக்களிக்க உரிமை கிடையாது,

தமிழ்நாடு பஸ் உரிமையாளர்கள் நிதிநிறுவனம் லிமிடெட்க்காக,
டி. ராஜா
நிர்வாக இயக்குனர்

இடம்: சென்னை
நாள் : 05.11.2021

**SHRIRAM TRANSPORT FINANCE CO LTD**
**PARANUR BRANCH** — **VECHILE FOR SALE**

| S.NO. | VEHICLE NO | MAKE | MODEL | YEAR OF MODEL |
|---|---|---|---|---|
| 1. | TN73A4617 | EICHER | EICHER 11.10 FBT | 2010 |
| 2. | TN19AD7248 | PIAGGIO | APE CITY PASSENGER-P | 2017 |
| 3. | TN19C9392 | TATA | TATA MAGIC-P | 2011 |

**CONTACT NO : KARTHIKEYAN K - 9585557189**

***NOTICE OF LOSS OF SHARE CERTIFICATES***

Notice is hereby given that the following share certificates issued by Ashok Leyland Limited had been lost/misplaced:

| Folio No. | Certificate No. | Distinctive Nos. | No. of shares | Name of the shareholder |
|---|---|---|---|---|
| 18763 | S018763 | 463677721 - 463682220 | 4500 | V R SIVAKUMAR(Deceased)<br>MRS RANI SIVAKUMAR |

Due notice thereof has been given to the Company and I/ We have applied to the Company for the issue of Duplicate Share Certificates and Transmission of Shares in my / our favour.

The public is hereby warned against purchasing or dealing in any way with the above Share Certificate(s). Any person who has any claim in respect of the said Share Certificate(s) should lodge such claim with Ashok Leyland Limited, No.1, Sardar Patel Road, Guindy, Chennai – 600032 or its Share Transfer Agents, Integrated Registry Management Services Pvt. Ltd.., “Kences Towers”, 2nd Floor, No.1 Ramakrishna Street, North Usman Road, T Nagar, Chennai – 600 017, within 15 days of publication of this notice else the Company will proceed to issue duplicate certificate(s), without further intimation .

Place : Chennai
Date: 05/11/2021

MRS RANI SIVAKUMAR
268/1 SCHEME ROAD
PRACE COURSE
COIMBATORE – 641 018.

**படிவம் ஏ**
**பொது அறிவிப்பு**
(நொடிந்த நிலை மற்றும் இந்திய திவால் வாரியம் (நிறுவன நபர்களுக்கான திவால் தீர்மானம் நடைமுறைகள்) விதிகள் 2016–ன் விதி 6ன் கீழ்)
**பிரதியுஷா ரிசோர்சஸ் அண்ட் இன்ப்ரா பிரைவேட் லிமிடெட்டிற்கு கடன் வழங்கியவர்களின் கவனத்திற்கு**

தொடர்புடைய விவரங்கள்

| | | |
|---|---|---|
| 1 | நிறுவன கடனாளர் பெயர் | பிரதியுஷா ரிசோர்சஸ் அண்ட் இன்ப்ரா பிரைவேட் லிமிடெட் |
| 2 | நிறுவன கடனாளர் இணைக்கப்பட்ட தேதி | 18/08/2005 |
| 3 | எந்த அதிகாரத்தின் கீழ் நிறுவன கடனாளர் இணைப்பு/பதிவு | கம்பெனிகள் பதிவாளர்–விஜயவாடா |
| 4 | நிறுவன கடனாளரின் நிறுவன அடையாள எண்/ வரையறுக்கப்பட்ட பொறுப்பு அடையாள எண். | U35111AP2005PTC047165 |
| 5 | நிறுவன கடனாளரின் பதிவு அலுவலகம் மற்றும் முதன்மை அலுவலக முகவரி (வேறு ஏதேனும் இருப்பின்) | கதவு எண். 25/40/12, கங்குவாரி தெரு, லட்சுமி டாக்கீஸ் அருகில், விசாகப்பட்டினம், ஆந்திரபிரதேசம்–530 001. |
| 6 | நிறுவன கடனாளரின் திவால் நிலை துவங்கப்பட்ட தேதி | 03/11/2021 |
| 7 | திவால் தீர்மான நடைமுறை மூடும் உத்தேச தேதி | 02/05/2022 |
| 8 | இடைக்கால தீர்மான நிபுணராக செயல்படும் திவால் நிபுணரின் பெயர் மற்றும் பதிவு எண். | திரு. கே. சிவலிங்கம்<br>பதிவு எண். IBBI/IPA-001/IP-P01597/2018-19/12430 |
| 9 | குழுவில் பதிவு செய்துள்ளபடி இடைக்கால தீர்மான நிபுணரின் முகவரி மற்றும் மின்னஞ்சல் | முகவரி, ப்ளாட் எண். 1603, துலிவ் ஹாரிஜான் ரெசிடென்சஸ் அருணாசலம் ரோடு, சாலிகிராமம், சென்னை, தமிழ்நாடு 600 093. இமெயில்: siva.k220353@gmail.com |
| 10 | இடைக்கால தீர்மான நிபுணருடன் கடித பரிமாற்றத்திற்கு பயன்படுத்த வேண்டிய முகவரி மற்றும் மின்னஞ்சல் | முகவரி:<br>திரு. கே. சிவலிங்கம் (ஐஆர்பி)<br>சி/ஓ– M/s. பிரம்மய்யா அண்ட் கோ, 48, மாசிலாமணி ரோடு, பாலாஜி நகர், ராயப்பேட்டை, சென்னை 600 014.<br>இமெயில்: irp.pripl@ibcprofessionalsolutionscom |
| 11 | கோரிக்கைகளை சமர்ப்பிக்க கடைசி தேதி | 17/11/2021 |
| 12 | கடன் வழங்கியவர்களின் வகுப்புகள் ஏதேனும் இருந்தால் பிரிவு 21, உப பிரிவு (6ஏ) உட்கூறு (பி)ன் கீழ் இடைக்கால தீர்மான நிபுணரால் கண்டறியப்பட்டது. | இந்த தேதியில் ஏதுமில்லை |
| 13 | ஒரு வகுப்பில் கடன் வழங்கியவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியாக செயல்பட அடையாளம் காட்டப்பட்ட திவால் நிபுணரின் பெயர்கள் (ஒவ்வொரு வகுப்பிலும் 3 பெயர்கள்) | பொருந்தாது |
| 14 | (ஏ) தொடர்புடைய படிவங்கள் மற்றும் (பி) அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விவரங்கள் கிடைக்கும்: | இணைய இணைப்பு: https://ibbigov.in/home/downloads<br>முகவரி: வரிசை எண். 10ஐ பார்க்கவும்.<br>சமீபத்திய வடிவங்களுக்கு, (நொடிந்த நிலை மற்றும் இந்திய திவால் வாரியம் (நிறுவன நபர்களுக்கான திவால் தீர்மானம் நடைமுறைகள்) விதிகள் 2016 பார்க்கவும். |

**பிரதியுஷா ரிசோர்சஸ் அண்ட் இன்ப்ரா பிரைவேட் லிமிடெட்**டில் நிறுவன திவால் தீர்மான நடைமுறைகளை 03.11.2021 அன்று துவங்குவதற்கு தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம் ஆணையிட்டுள்ளது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**பிரதியுஷா ரிசோர்சஸ் அண்ட் இன்ப்ரா பிரைவேட் லிமிடெட்**டிற்கு கடன் வழங்கியவர்கள் தங்கள் உரிமை கோரல்களை அதற்கான அத்தாட்சியை அயிட்டம் எண். 10ல் குறிப்பிட்டுள்ள முகவரியில் இருக்கும் இடைக்கால தீர்மான நிபுணரிடம் 17.11.2021 அன்றோ அல்லது அதற்கு முன்போ அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். நிதி கடன் வழங்கியவர்கள் மின்னணு மூலமே உரிமைக்கான அத்தாட்சிகளை அளிக்க வேண்டும். மற்ற இதர கடன் வழங்கியவர்கள் நேரடியாகவோ, தபால் மூலமோ அல்லது மின்னணு முறையிலோ தங்களது உரிமை கோரல்களுக்கான அத்தாட்சிகளை அளிக்கலாம்.

நுழைவு எண் 12க்கு எதிராக பட்டியலிடப்பட்ட ஒரு பிரிவைச் சேர்ந்த நிதி கடன் வழங்கியவர்கள், நுழைவு எண் 13க்கு எதிராக பட்டியலிடப்பட்ட மூன்று திவால் நிபுணர்களிடையே அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியை குறிப்பிட்டு அவரை படிவம் சிஏ–ல் உள்ள வகையின் (வகுப்பை குறிப்பிடவும்) அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியாக செயல்பட வைத்தல். தவறான முறையில் உரிமை கோரல்களுக்கான அத்தாட்சிகளை அளித்தால் அபராதம் விதிக்கப்படும்.

**இடைக்கால தீர்மான நிபுணரின் பெயர் மற்றும் கையொப்பம்**
ஒப்பம்
**கே. சிவலிங்கம்**

**தேதி: 06.11.2021**
**இடம்: சென்னை**

**kotak** Kotak Mahindra Bank
**கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்**
பதிவு அலுவலகம்: 27BKC, C 27, G – பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை, மகாராஷ்டிரா, பின்கோடு – 400 051
கிளை அலுவலகம்: கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட், எண். 185, 2வது தளம், மவுண்ட் ரோடு, அண்ணா சாலை, சென்னை–600 006.
ஆன்லைன் மூலம் இ–ஏல முறையில் சொத்து விற்பனை

**அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு**

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 8(6)–ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு

சிசிஎப்ஜஎல் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு கடனை ஒதுக்கியுள்ளது. ஈடுபெற்ற கடன் அளித்தவர்களிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் 02.11.2013 அன்று கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டது என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் மற்றும் கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்)க்கு குறிப்பாகவும் இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது. ஈடுபெற்ற கடன்தாரரான 1. திரு. G. சண்முகம், த/பெ. திரு. P. கணபதி, 2 MS.S. பவானி, க/பெ. திரு.G. சண்முகம் ஆகியோர் கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு கடன் கணக்கு எண் 5267407ன் கீழ் 02–நவம்பர்–21 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை ரூ.70,24,331/–மற்றும் திரும்ப செலுத்தும் நாள் வரையில் பொருந்தக்கூடிய எதிர்கால வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக ஈடுபெற்ற கடன் அளித்தவர்களிடம் உங்களால் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் அவை ‘‘எங்கு எப்படி உள்ளதோ அப்படியே’’ என்ற அடிப்படையில் 14.12.2021 பகல் 12.00 மணி முதல் 1.00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்பில் விற்பனை செய்யப்படும். குறைந்தபட்ச விலை: ரூ.1,03,00,000/– (ரூபாய் ஒரு கோடியே மூன்று லட்சம் மட்டும்) மற்றும் முன்வைப்புத் தொகை ரூ.10,30,000/– (ரூபாய் பத்து லட்சத்து முப்பதாயிரம் மட்டும்). கேஒய்சி உடன் முன்வைப்புத் தொகையை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் 13.12.2021 அன்று இரவு 7.00 மணி (இந்திய நேரப்படி) வரை.

சொத்தின் விவரம்: ப்ளாட் எண். 3 சொத்து மற்றும் அதன் துண்டுகளும். புதிய எண். 13, பழைய கதவு எண். 5, முதல் தெரு, சரோஜினி நகர், எண். 65, கொளத்தூர் கிராமம், விஸ்தீரணம் 2838 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம். சர்வே எண். 86/4, சென்னை மாநகராட்சி எல்லை வடமேற்கு பெரம்பூர் புரசைவாக்கம் தாலுக்கா வடசென்னை பதிவு மாவட்டம், செம்பியம் சார்பதிவு மாவட்டம். சொத்தின் எல்லைகள்: வடக்கு: சர்வே எண். 86/4, தெற்கு: 20 அடி ரோடு, கிழக்கு: சர்வே எண். 85/1, மேற்கு: மனை எண். 2.

சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி தனியார் ஒப்பந்தத்தின் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து ஏலதாரர்கள் திரு. விஷால் ஆதிசேஷன் (+91 9677793465), திரு. ராஜேந்தர் தாஹியா (+91 8448264515), திரு. விஜய்குமார் மேனன் (+91 9940572248) மற்றும் திரு. சூரியா பெரியசாமி (+91 9600222111) ஆகியோரை தொடர்பு கொள்ளலாம். விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட் இணையதளம் www.kotak.comல் அளிக்கப்பட்டுள்ள லிங் http://www.kotak.com/en/bank–auctions.html and/or on https://bankauctions.inல் பார்வையிடலாம்.

**இடம் : சென்னை** — **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**
**தேதி : 06–11–2021** — **கோடடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்**

SUGAL & DAMANI
**சுகல் & தமானி ஷேர் புரோக்கர்ஸ் லிமிடெட்**
CIN: L65991TN1993PLC028228
**‘சிட்டி சென்டர் பிளாசா’, (முதல் தளம்), எண்.7, அண்ணா சாலை, சென்னை – 600 002**

**அறிவிப்பு**

செக்யூரிட்டிஸ் அன்ட் எக்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 29 மற்றும் 47ன்படி, இதர அலுவல்களுக்கு இடையே, 30 செப்டம்பர், 2021–ல் முடிந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பதிவு செய்வதற்காக கம்பெனியின் இயக்குனர்கள் குழு கூட்டம், கோவிட் – 19 தொற்று காரணமாக காணொலி காட்சி மூலம் நவம்பர் 12, 2021, வெள்ளிக்கிழமை அன்று காலை 11.00 மணிக்கு நடைபெறும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்த அறிவிப்பு கம்பெனியின் இணையதளம் www.sugalshare.com மற்றும் கம்பெனியின் பங்குகள் பட்டியலிடப்பட்டுள்ள ஸ்டாக் எக்சேஞ் இணையதளம் www.bseindia.comலும் (பிஎஸ்இ லிமிடெட்) உள்ளது

இயக்குனர்கள் குழு சார்பாக
**சுகல் & தமானி ஷேர் புரோக்கர்ஸ் லிமிடெட்டிற்காக**
ஒப்பம்/–
**ராதிகா மகேஸ்வரி**
கம்பெனி செயலாளர்

இடம் : சென்னை
தேதி : 5/11/2021